வகுப்பு : 10 | தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2025 - 26

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.** 15X1=15

1. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ------------
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ)என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என் மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

2. தொழிற்பெயரோடு தொடர்பில்லாததைத் தேர்ந்தெடு.
அ) நடை ஆ) உரை இ) சூடு ஈ) பொறுத்தார்

3. பரிபாடல் அடியில் விசும்பில், இசையில் ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ)வான்வெளியில், பேரொலியில்
இ) வானத்தில், பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. இரவீந்திரநாத் தாகூர் ----------- மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ------ மொழியில் மொழிபெயர்த்த பிறகுதான், அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.
அ) ஆங்கில, வங்காள ஆ) வங்காள, ஆங்கில இ) வங்காள, தெலுங்கு ஈ) தெலுங்கு, ஆங்கில

5. திருவிளையாடற் புராணத்தின் காண்டங்கள் மற்றும் படலங்களின் எண்ணிக்கை முறையே
அ) 3, 64 ஆ) 4, 64 இ) 5, 64 ஈ) 6,64

6. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது
அ) சுட்டி ஆ) கிண்கிணி இ) குழை ஈ) சூழி

7. 'ஒரெழுத்தில் சோலை' – இரண்டெழுத்தில் வனம் என்னும் புதிருக்கான விடை
அ) காடு ஆ) காற்று இ) நறுமணம் ஈ) புதுமை

8. செய்தி1 : ஒவ்வோர் ஆண்டும் சூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2: காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3: காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ)செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

9. கிளையிலிருந்து பிரிவது -----------
அ) கொம்பு ஆ) குச்சி இ) இணுக்கு ஈ) சினை

10. பொருந்தாததைத் தேர்ந்தெடு.
அ) கிழக்கு – மழைக்காற்று ஆ)மேற்கு – குளிர்காற்று
இ) வடக்கு – ஊதைக்காற்று ஈ) தெற்கு – தென்றல்

11. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இலக்கியம் பிறமொழிப் படைப்பினைத் தழுவித் தமிழில் படைக்கப்பட்டது?
அ) திருக்குறள் ஆ) கம்பராமாயணம் இ) கலித்தொகை ஈ) சிலப்பதிகாரம்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12,13,14,15) விடை தருக.

*விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்*
*செந்தீச் சுடரிய ஊழியும்;*

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பெருஞ்சித்திரனார் ஆ) கீரந்தையார்

இ) அதிவீரராம பாண்டியர் ஈ) பரஞ்சோதி முனிவர்

13. ஊழி – ஊழ் ஆகியவற்றின் பொருள் முறையே

அ) யுகம் – முறை ஆ) முறை – யுகம்

இ) வானம் – பேரொலி ஈ) பூமி – மழை

14. ஊழ் – ஊழ் இலக்கணக்குறிப்புத் தருக.

அ) இரட்டைக்கிளவி ஆ) வினைத்தொகை இ) அடுக்குத்தொடர் ஈ) பண்புத்தொகை

15. உரு அறிவாரா ஒன்றன் ஊழியும் – என்ற தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானம் ஆ) நெருப்பு இ) பூமி ஈ) காற்று

## பகுதி – II பிரிவு – 1

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.

ஆ) தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.

18. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

19. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது?

20. விருந்தோம்பல் என்றால் என்ன?

21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5X2=10

22. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

ஆ) கல்வியே ஒருவருக்கு நன்மை பயக்கும்

23. எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடித்துத் தமிழ் எண்களில் எழுதுக.

அ) நாற்றிசையும் செல்லாத நாடில்லை

ஆ) ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மனவனுக்கு வகுப்பது பரணி.

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. '*அமர்ந்தான்*'

25. கலைச்சொல் தருக.

அ) **Land Breeze** ஆ) **Whirlwind**

26. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக.

27. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.

அ) சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல் ; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.

ஆ) இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள் ; வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினம்.

(காற்றின் பாடல், மிதக்கும் வாசம், வனத்தின் நடனம், உயிர்ப்பின் ஏக்கம்)

28. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கின்றேன்.

இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

## பகுதி – III பிரிவு – 1

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. பல துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?

30.தமிழ் மொழி உலகின் மூத்த மொழியாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் திகழ்கிறது. மேலும், அது காலத்திற்கு ஏற்பத் தன்மை வளர்த்துக்கொண்டே இருப்பதால் சொல்வளம் நிறைந்த, நிலைத்த மொழியாக விளங்கி வருகிறது. ஒவ்வொன்றையும் தனித்தனியான சொற்களைக் கொண்டு சொற்பஞ்சம் இல்லாமல் அழைப்பது தமிழ்மொழியின் தனிச்சிறப்பு. இச்சிறப்பினை ஆய்வு செய்த அறிஞர்களுள் பாவாணர் குறிப்பிடத்தக்கவர்.

அ) பத்திக்கேற்ற தலைப்பு தருக. ஆ)தமிழ்மொழி நிலைத்திருக்கக் காரணம் என்ன?

இ) தமிழ்மொழியின் தனிச்சிறப்பு யாது?

31.உயிராகநான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ......... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்.... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2X3=6

**கட்டாய வினா எண் 34 க்கு விடையளிக்கவும்.**

32.மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

33.வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34.அடிபிறழாமல் எழுதுக.

அ) 'புண்ணிய' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணம் பாடல்.

(அல்லது)

ஆ) 'மாற்றம்' எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2X3=6

35.வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய பாடலைப் ***பாடிக் காட்டினார்***. இதை மாணவர்கள் கவனமாகக் ***கேட்டுப் பாடினர்***. மாணவர்கள் ***கேட்ட பாடலில்*** இருந்து ஆசிரியர் ***சிறு வினாக்களைக்*** கேட்டார். இப்பாடல் குறித்த உங்கள் கருத்துக்களை எழுதி வாருங்கள். நன்றாக ***எழுதுபவருக்குக் பரிசு*** உள்ளது என்றும் ஆசிரியர் கூறினார். – அடிக்கோடிட்ட சொற்களுக்கான தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிக.

36.நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. – குறளில் பயின்று வரம் அணியை விளக்குக.

37.ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

பகுதி – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38.அ) ஆள்வினை உடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

(அல்லது)

ஆ)

*மலர்ந்தும் மலராத பாதிமலர் போல*
*வளரும் விழி வண்ணமே – வந்து*
*விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக*
*விளைந்த கலை அன்னமே*
*நதியில் விளையாடி கொடியில் தலைவீசி*
*நடந்த இளந் தென்றலே – வளர்*
*பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு*
*பொலிந்த தமிழ் மன்றமே.*

– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி எழுதுக.

39.அ) மாவட்ட அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41.கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 113 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் மருதனின் மகள் இளவரசி நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து மட்டைப்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தன்னை இளவரசியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42.அ) உணவு முறை குறித்து சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்:

Translation is an art in itself. No One can do that. A translator should be neutral and not attached to any language. Specifically, he should be proficient in both the languages. i.e Both the language and the source language They Should be famillar with the Social and Cultural conditions of both the Languages. -

பகுதி – V

V. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43.அ) நாட்டு வளமும் சொல் வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.

(அல்லது)

ஆ) சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் விளக்குக.

44.அ) 'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க.

45.அ) தமிழின் இலக்கியவளம் – கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துக்கள் – தமிழுக்கு செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. குறிப்புகள்: முன்னுரை – தமிழன்னையின் அணிகலன்கள் – தமிழ்ச் சான்றோர்கள் – தமிழின் வளர்ச்சி – தமிழின் எதிர்காலம் – முடிவுரை.